MCOP. 69/2023- PW1 .

திரு. ராஜசேகர்   த/பெ.சீனிவாசன்

நாள்:12.03.2026.

குறுக்கு விசாரணை 2வது எதிர்மனுதாரர் தரப்பில் :

விபத்தின் போது நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் Hero Splender இருசக்கர வாகனத்தில் சென்றேன். அந்த வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் பக்கத்து வீட்டு அண்ணுக்கு சொந்தமானது. அந்த வாகனத்தை யார் ஓட்டியது என்றால் நான் தான் ஓட்டி சென்றேன். பின்னால் மஞ்சுநாத் என்பவர் உட்கார்ந்து வந்தார். நான் கெலமங்கத்தில் இருந்து ஓசூர் நோக்கி சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். கார் நாங்கள் சென்ற திசைக்கு எதிர்திசையில் சென்றது என்றால் சரிதான். யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் என் நண்பர் பாலகிருஷ்ணன் என்பவர் புகார் கொடுத்தார். அவர் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர் விபத்தை நேரில்பார்க்காமல் எனது கவனகுறைவை மறைத்து 1வது எதிர்மனுதாரர் வாகனஓட்டுநர் மீது பொய்யாக புகார் கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. நான் தான் வேகமாக சென்று 1வது எதிர்மனுதாரர் கார் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் குணம் மருத்துவமனைக்கும், காவேரி மருத்துவமனைக்கும் சிகிச்சைக்கு சென்றேன். குணம் மருத்துவமனையில் 1 நாள் சிகிச்சையில் இருந்தேன். குணம் மருத்துவமனையில் நான் உள்நோயாளியாக இருந்ததற்கு விடுவிப்பு சான்று தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எனக்கு கழுத்து, பல், தாடை, வலது கை, நெஞ்சு ஆகிய இடங்களில் அடிப்பட்டது. எனக்கு நெஞ்சில் அடிப்பட்டதாக ம.த.சா.ஆ.7 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.7 ல் எனக்கு பல் மற்றும் தாடை பகுதியில் தான் எலும்புமுறிவு ஏற்பட்டதாக சொல்லியிருக்கிறார்கள் என்றால் சரிதான். மற்ற இடங்களில் எலும்பு முறிவு

ஏற்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அதை வழங்கிய மருத்துவர் சாட்சியாக விசாரிக்கப்படாததால் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் சாய்ஆட்டோ கம்பெனியில் அக்கவுண்டட்டாக வேலை செய்து வந்தேன். தற்போது நான் கான்ட்ராக்ட் லேபராக ATOM கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ம.த.சாஆ.17 சம்மபள சான்றிதழ் நான் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வருமான இழப்பிற்கு நான் உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யததால் எனக்கு வருமான இழப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது நான் LLR அப்ளை செய்திருந்தேன். எனது பின்னால் உட்கார்ந்து வந்த மஞ்சுநாத்திற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. மஞ்சுநாத்திற்குன்டானஓட்டுநர் உரிமத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்தின் காரணமாக நிரந்தர ஊனமோ செயல்திறன் பாதிப்போ வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் எனது அஜாக்கிரதையால் விபத்து நடைப்பெற்றுள்ளதால் இறுதி உத்தரவு பிறப்பிக்கும் போது எனது கவனக்குறைவையும் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.